# தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் தமிழ்ப்பணி

**அறிமுகம்**

*"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு*
*முன்தோன்றிய மூத்த குடி".*

எனச் சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடி மக்களின் வரலாறும் பண்பாடும் மிகத் தொன்மை வாய்ந்தவை. அதற்கேற்ப தொன்மை மிக்க இலக்கிய இலக்கண வளத்தையும் கொண்டது நம்தாய்மொழியாகிய தமிழ். பனை ஓலையில் ஒளிந்திருந்த பசுந்தமிழை வண்ண வண்ணமையால், சித்திர எழுத்தால், பன்னிறத்தாளில் கொலுவீற்றிருக்கக் கண்டு நாம் இன்று மகிழ்கிறோம். அந்த நூல்கள் எவ்வாறு நமக்குக் கிடைத்தன என்று நாம் அறிவோமா! இன்று இணையக் கணினி வழியாக நாம் அனைத்து பாடங்களையும் தேடிக் காண முடிகிறது என்றால், இதற்கு முன் அவை எப்படி பாதுகாக்கப்பட்டது என்பதனை அறிவோமா! டாக்டர் உ.வே.சா. அவர்கள் இல்லையென்றால் நமக்கு சங்க இலக்கியங்கள் எதுவுமே கிடைத்திருக்க மாட்டா என்று தான் கூற வேண்டும். அவரால் தமிழ் போற்றி பாதுகாக்கப்பட்டது, இன்றும் நீடுழி வாழ்ந்து வருகின்றது என்பது தான் உண்மை.

**உ.வே. சாமிநாதய்யர் இளமை மற்றும் கல்வி**

உ.வே.சா அவர்கள் கும்பகோனத்திற்கு அருகில் உள்ள "சூரியமூலை" என்னும் கிராமத்தில் 1855ம் ஆண்டு பிறந்தார். உ.வே.சாவின் தந்தையார் சங்கீதத்தில் சிறந்த பண்டிதர். தமிழும் நன்கு கற்றவர். தந்தை தான் முதலாசிரியராக நிகண்டு, சதகம், நீதி நூல்கள் அந்தாதிகள் முதலான நூல்களைக் கற்றுக்கொடுத்தார். முதலில் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்று, பின்னர் பல தமிழ் அறிஞர்களிடம் சென்று தமிழ்ப்பாடம் கேட்டார்.அக்காலத்தில் பேரும் புகழும் பெற்ற

**மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை** அவர்களிடம் கல்வி கற்க விரும்பி, மாயூரம் சென்று, அவரிடம் மாணவராக சேர்ந்தார்.

**உ.வே.சாவின் ஆசிரியப் பணி**

உ.வே.சா. தனது ஆசான் பிள்ளையவர்கள் காலத்திற்குப்பின் திருவாடுதுறையிலிருந்து பாடம் சொல்லிக் கொடுக்குமாறு மகா சந்நிதானம் கூறவும் அவ்வாறே அவரும் மடத்திலேயே தங்கினார். நான்கு ஆண்டுகள் அங்கு தங்கிப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பின்னர், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அங்கு பணியாற்றும் காலத்தில் தமிழ்ப்பற்று மிக்க சேலம் இராமசாமி முதலியார் நீதிபதியாக இருந்தார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உ.வே.சா தாம் கற்ற இலக்கியங்களைப் பற்றிக் கூறினார்.

குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூர் அந்தாதி, திருவரங்க அந்தாதி, அழகர் அந்தாதி, கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்றெல்லாம் கூறியதோடு, அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத்தமிழில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என ஐயர் தாம் கற்றவைகளைப் பற்றிக் கூறினார்.

இவ்விதமாக ஒரு நீண்ட பட்டியலைக் கூறவும், நீதிபதி, ஐயரிடம் நிதானமாக “இதெல்லாம் நீங்கள் படித்து என்ன பயன்?” என்று கேட்டார். நீதிபதி இவ்விதம் கேட்டு விட்டாரே என்று எண்ணியவராய் தாம் படித்த இன்னும் சில நூல்கள் பற்றியும் கூறத் தொடங்கினார். திருவிளையாடற் புராணம், மயூரப் புராணம் போன்றவற்றுடன் இராமாயணத்தை முழுவதும் ஒரு முறைக்கு இருமுறை படித்ததாகவும் கூறினார்.

இவ்விதம் ஐயர் கூறவும், அவர் கூறியதைப் பற்றி பொருட்படுத்தாமல் "சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? என்று கேட்டதும் ஐயர் உண்மையில் திகைத்துப் போனார். "புத்தகங்கள் கிடைக்கவில்லை, கிடைத்ததும் அவைகளையும் படிக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்" என்று கூறிச் சமாளித்தார்.

**உ.வே.சா அவர்களின் தமிழ்நூல் தேடல்பணி**

சேலம் இராமசாமி முதலியார் அவர்களே, ஐயர் அவர்களிடம் சிந்தாமணித்தாள் ஏடு ஒன்றைக் கொடுத்து, "சிந்தாமணி மிகவும் சிறந்த நூலாகும் கம்பராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் இந்தக் காவியம் தான் வழிகாட்டி. இதைப் படித்துப் பொருள் கண்டு விளக்கினால் உங்களுக்கும் நன்மை எனக்கும் இன்பம் பயக்கும்" என்று கூறினார்.

இவ்விதம் நீதிபதி கூறியதிலிருந்து ஐயர் சிந்தாமணியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். இதை அவர் நன்றியுடன் கூறவும் செய்துள்ளார். பின்னா ஊர் ஊராகச் சென்று பல துயரங்களை அனுபவித்து, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த போதே பிற நூல்களைப் பற்றி அவருக்குக் கிடைத்த குறிப்புகளையும், பிறவற்றையும் அவர் குறித்துக் கொண்டு வந்ததால் அவருக்குத் தாம் மேற்கொண்ட பணி இலகுவாயிற்று.

**உ.வே.சாவின் தமிழ்ப் பற்று**

சாமி அவர்கள் தமிழைக் கசடறக் கற்றார், தமிழ் இலக்கியங்களை எங்கும் பரவச் செய்ய அரும்பாடுபட்டார். தமிழால் வளர்ந்தார். அந்த அமிழ்தினினுமினிய தமிழைப் பெரிதும் போற்றி நன்றியுணர்வுடன் கூறும் அடிகள் நெஞ்சத்தைத் தொடுவனவாகும். தமிழ் மொழியை எவ்விதம் வளர்க்கக் கருதினார் என்பதையும் அவர் வாய் மொழியிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

***இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***
***விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த***
***உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்***
***பதிப்பிக்கவே கடைக்கண் பார்.***

**உ.வே.சாவின் தமிழ்நூல்கள் பதிப்புப்பணி**

உ.வே.சா அவர்கள் தம் ஆசிரியருடைய வரலாற்றை மிக விரிவாக எழுதியுள்ளார். இவருடைய பதிப்புக்கள் பிழையற்றவை, விரிவான முன்னுரைகளோடும், ஆய்வுரைகளோடும் கூடியவை, மேனாட்டுப் பதிப்புக்கள் போன்ற அமைப்புடையவை. பத்துப்பாட்டு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் அடியாருக்கு நல்லாருரை, மணிமேகலை, பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல், திருவிளையாடல் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். புதியதும் பழையதும், கண்டதும், கேட்டதும், நினைவு மஞ்சரி முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**உ.வே.சா பெற்ற பட்டங்களும், பாராட்டுகளும்**

தமிழுக்காக அருந்தொண்டாற்றியமையால் 1906ம் ஆண்டு இவருக்கு **"மகாமகோ பாத்தியாயர்"** என்ற பட்டத்ததை அன்றைய அரசு

அளித்து மகிழ்ந்தது. பின்னர் **“தாட்சிணாத்திய கலா நிதி”** என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகம் அவருடைய அரும் பெரும் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1932-ல் **“டாக்டர்”** பட்டமளித்துப் பெருமை கொண்டது.

இவ்விதம் தமிழ் இலக்கியம் சிறக்க பெருந்தொண்டாற்றி வந்த ஐயரவர்களின் சலியாத உழைப்பைப் பெரிதும் பாராட்டி **ஜி.யு.போப்** அவர்கள் கடிதம் எழுதிப் பெரிதும் போற்றியுள்ளார். பேராசிரியர் **ஜீலியன் வின்சோன்** என்னும் பிரெஞ்சு அறிஞர் சிந்தாமணிப் பதிப்பைப் பாராட்டிப் பாரிசிலிருந்து கடிதம் எழுதி மகிழ்ந்துள்ளார். அப்போது தமிழகத்தில் வாழ்ந்து வந்த பேராசிரியர் **மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார்** போன்றோர் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர். மேடைப் பேச்சில் அலுப்புத்தட்டாமல் பேசும் ஆற்றல் பெற்றவராகவும் ஐயர் அவர்கள் திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பெருமகனார் ஏடு தேடும் முயற்சியில் ஈடுபட்டு அல்லும் பகலும் பாடுபட்டதை உலகம் அறியும். அதை **நாமக்கல் கவிஞர்** இவ்விதம் கூறுகிறார்:

***அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக***
***அலைந்தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்***
***செல்லாத்த ஏடுகளைத் தேடித் தேடிச்***
***சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து***
***சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கி***
***சோர்வறியா(து) உழைத்த ஒரு சாமி நாதன்***
***இல்லையெனில் அவன் பதித்த தமிழ்நூ லெல்லாம்***
***இருந்த இடம் இந்நேரம் தெரிந்தி டாதே.***

**முடிவுரை**

தமிழ்த்தாத்தா என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த உ.வே.சா. அவர்கள் உண்மையில் தமிழைப் பெரிதும் பேணிக் காத்தார் என்று தான் கூற வேண்டும். தமிழ் பண்பாட்டுடன் சிறந்த முறையில் வாழ்ந்து வந்த சாமி நாத ஐயர் நல்ல மாணவர் பரம்பரையையும் உருவாக்கித் தமிழின் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாளெல்லாம் உழைத்து வந்தார். தமிழ் உள்ளவரை இந்தத் தமிழத் தாத்தாவின் புகழும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.




**முனைவர்.ஆ.இராஜேஸ்வரி**

உதவிப் பேராசிரியர்

கலைத்திட்ட வரைவு, மதிப்பீட்டுத்துறை

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

சென்னை-97.